**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை - சீர்மரபினர் நலன் - 'சீர்மரபினர் நல வாரியம்' அமைத்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத் (பிந3) துறை**

அரசாணை (நிலை) எண்.13
நாள் 20.04.2007

படிக்கப்பட்டது:

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் கடித எண்.டி1/3201/2007, நாள்.17.4.2007.

----

ஆணை:

சீர்மரபினர் சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென அவர்களுக்கு தனியாக ஒரு நல வாரியம் அமைத்து, அனைத்து சலுகைகளும் வழங்கப்படும் என அரசு 18.4.2007 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தது. இதனைத் தொடர்ந்து மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், திரு பெ. மின்னல்கொடி அவர்களைத் துணைத்தலைவராகவும் கொண்டு ''சீர்மரபினர் நல வாரியம்'' பின்வருமாறு அமைத்து அரசு ஆணையிடுகிறது.

1. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தலைவர்

2. திரு பெ. மின்னல்கொடி,செல்லூார், மதுரை. துணைத் தலைவர்

அரசு சார்பான உறுப்பினர்கள்

3. செயலாளர் , நிதித்துறை (அல்லது) அவரது பிரதிநிதி உறுப்பினர்

4. செயலாளர், வருவாய்த்துறை உறுப்பினர்

5. செயலாளர், சமூகநலத்துறை உறுப்பினர்

6. செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை உறுப்பினர்

7. இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை உறுப்பினர்

8. இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் உறுப்பினர் - செயலர்

அரசு சாரா உறுப்பினர்கள்

9. திரு என். பாலு, செல்லூர், மதுரை உறுப்பினர்

10. திரு வீ. கல்யாணி, பூதிபுரம், மதுரை மாவட்டம் உறுப்பினர்

11. திரு. எஸ். வைகை சேகர், தேனி மாவட்டம் உறுப்பினர்

12. திரு பி. வி. கதிரவன், அண்ணாநகர், மதுரை உறுப்பினர்

13. திரு கே. கந்தசாமி, திருப்பரங்குன்றம், மதுரை உறுப்பினர்

14. திரு. வி. செல்வராசா, புள்ளம்பாடி, திருச்சி உறுப்பினர்

15. திரு. க. குணசேகரன், கரூர் உறுப்பினர்

16. திரு எம். மகேந்திரன், உசிலம்பட்டி, மதுரை மாவட்டம் உறுப்பினர்

17. திரு அய்யாவு, நாவக்குறிச்சி, சேலம் மாவட்டம் உறுப்பினர்

18. திரு கி. துரைராஜ்,பெரியகோவிலான்குளம்,திருநெல்வேலி மாவட்டம் உறுப்பினர்

19. திரு எஸ். முருகப்பன்,பாண்டுகுடி, இராமநாதபுரம் மாவட்டம் உறுப்பினர்

2. சீர்மரபினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென அரசு செயற்படுத்தும் பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தை கண்காணித்து, இப்பிரிவினரின் மேம்பாட்டினை உறுதிசெய்ய தக்க ஆலோசனைகளை இவ்வாரியம் அரசுக்கு வழங்கும்.

3. சீர்மரபினர் நலவாரியம் ஒரு முதல் நிலைக் குழுவாகச் செயல்படும். இக்குழு உறுப்பினர்கள் அவ்வப்போது நடைமுறையில் இருக்கும் விதிகளுக்குட்பட்டு பயணப்படி மற்றும் தினப்படி பெற உரிமை அளிக்கப்படுகிறது. அரசு சாரா உறுப்பினர்களின் பயணப்படி / தினப்படி பட்டியல்களை பெற்று வழங்க மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. அரசு சாரா உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.

4. இச்செலவினம் ‘‘2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் - க்ஷஹ தலைமையிடப் பணியாளர் - மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம் - 04 பயணச் செலவுகள் (த.தொ.கு. 2225 03 001 க்ஷஹ 0401) என்ற தலைப்பில் பற்று வைக்கப்படும்.

5. இவ்வாணைக்கு அரசாணை (நிலை) எண்.1177, நிதி (படிகள் 1), நாள்.19.9.97 இன்படி நிதித்துறையின் இசைவு தேவையில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

எல்.கே. திரிபாதி
தலைமைச் செயலர்

பெறுநர்

மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்) சென்னை -9.

திரு பெ. மின்னல்கொடி, த/பெ பெருமாள்தேவர், 21, திருவேற்புடையார் கோவில் சன்னதித் தெரு, செல்லூர், மதுரை-2

செயலாளர், நிதி /வருவாய் / சமூகநலம் / பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம் / பள்ளிக்கல்வி, சென்னை -9.

இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை-6.

இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், சென்னை -5.

திரு என். பாலு, த/பெ நல்லுத் தேவர், 3, அய்யனார்கோவில் 4 வது தெரு, செல்லூர், மதுரை * 2

திரு வீ. கல்யாணி, த/பெ. வீரணத் தேவர், கிருஷ்ணாபுரம், பூதிபுரம் அஞ்சல், செல்லம்பட்டி ஒன்றியம், மதுரை மாவட்டம்.

திரு எஸ். வைகை சேகர், த/பெ. சுந்தரராஜ் தேவர், சுந்தர வன்னியம்மன் கோவில் தெரு, வைகைபுதூர், வைகை அணை அஞ்சல், பெரியகுளம் வட்டம், தேனி மாவட்டம்.

திரு பி.வி. கதிரவன், த/பெ. வேலாண்டித் தேவர், 156, வடக்கு 4வது தெரு, அண்ணாநகர், மதுரை -20.

திரு கே. கந்தசாமி, த/பெ. கருப்பண்ணத் தேவர், 18/5, மகாகவி பாரதியார் நகர், பெரிய ரத வீதி, திருப்பரங்குன்றம், மதுரை.

திரு வி. செல்வராசா, பெருவளப்பூர், புள்ளம்பாடி ஒன்றியம், திருச்சி மாவட்டம்.

திரு க. குணசேகரன், த/பெ. கந்தசாமி கவுண்டர், 8, பிரதட்சணம் ரோடு, ஏ' பிளாக், கரூர் -2.

திரு எம். மகேந்திரன், த/பெ. மூக்கையா தேவர், 11-9-54 பி ஆவடைத்தங்கநாடார் தெரு, வண்ணாரப்பேட்டை, உசிலம்பட்டி * 625 532.

திரு அய்யாவு, த/பெ. சுருட்டையன், நரிக்குறவர் தெரு, நாவக்குறிச்சி அஞ்சல், ஆத்தூர் வட்டம், சேலம்

மாவட்டம்.

திரு கி. துரைராஜ், த/பெ. கிருஷ்ணசாமிபாண்டியன், சண்முகநல்லூர்,
பெரிய கோவிலான்குளம் அஞ்சல், சங்கரன்கோவில் வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.

திரு எஸ். முருகப்பன், முன்னாள் திருவாடானை ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்,
பாண்டுகுடி, திருவாடானை வழி, இராமநாதபுரம் மாவட்டம்.

நகல் பெறுவோர்

மாநில கணக்காயர், சென்னை -18/35
சம்பள கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை-5.
நிதித்துறை / வருவாய் துறை / பள்ளிக் கல்வி / சமூகநலத்துறை ,
சென்னை -9.
முதலமைச்சரின் செயலர், சென்னை -9.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை -9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை -9.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்,
சென்னை -5.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்